# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# O.S.No.6/2018

2025–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய **பி.வா.சா.4 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K.அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் ஏற்கனவே பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். என் மகள் ஜெயபிரதாவின் பிறப்பு சான்று தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ–19 (மேற்படி ஆவணம் வருவாய் துறை அதிகாரிகளை தயார் செய்யப்பட்டதுஎன்று 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.) 13.10.1997 ல் இறந்துபோன எனது கணவர் ஜெயபிரகாஷ் பெயரில் பெரம்பலூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட புகார் ஏற்பு சான்று பி.வா.சா.ஆ–20 (மேற்படி ஆவணத்தில் காவல்துறையின் முத்திரை இல்லை என்பதாலும், மேற்படி ஆவணத்தின் அச்சில் ஒரு தேதியும் பேனாவால் எழுதியதில் ஒரு தேதியும் இருப்பதால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது) 28.12.1994ல் எனது கணவர் எனக்கு பொங்கல் வாழ்த்து எழுதி அனுப்பிய போட்டோ பி.வா.சா.ஆ–21 (மேற்படி

ஆவணத்தின் எழுத்துப்பிழைகள் இருப்பதாலும் ஜெயபிரகாசம் என்று ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டதில் EPK என்று இனிஷியல் போடப்பட்டு இருப்பதாலும் இந்த ஆவணத்தை குறியீடு செய்ய 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது.)

**(குறுக்கு விசாரணைக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.